**வேலூர் மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு. சா.மார்ஸ்**

**ந.க.எண். /EMIS/2019** **நாள்: .01.2019**

**பொருள் :** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை – இணையதளத்தில் பதிவு செய்தல் – பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் விவரங்கள் – பதிவேற்றம் செய்தல் – பணியினை விரைந்து முடித்திட தகவல் தெரிவித்தல் – சார்ந்து.

**பார்வை :**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6, அவர்களின் கடிதம் ந.க.எண்.4393/SS/EMIS நாள்:10.12.2018.
2. கூடுதல் மாநிலத் திட்ட இயக்குநர்–I, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6 அவர்களின் கடிதம் ந.க.எண். 4393/SS/EMIS நாள்:11.01.2019.

*********

பார்வையில் காணும் கூடுதல் மாநிலத் திட்ட இயக்குநர்–I, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கடிதத்திற்கிணங்க அனைத்து வகைப் பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் விவரங்களை கல்வி மேலாண்மைத் தகவல் இணைய தளத்தில் பள்ளிகள் வாரியாக பதிவேற்றம் செய்திடுமாறு அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ), ஆகியோருக்கு மாவட்ட திட்ட அலுவலகத்திலிருந்து வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான ஒன்றியங்களில் மேற்படிப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இருப்பினும் சில ஒன்றியங்களில் ஆசிரியர்களின் விவரங்களைப் பதிவற்றம் செய்யும் பணிகளிலும், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் வருகையைப் பதிவு செய்தல் போன்ற EMIS தொடர்பான பிற பணிகளிலும் சுணக்கம் இருப்பது தெரிய வருகிறது.

மேற்கண்ட பணிகளை துல்லியமாகவும் துரிதமாகவும் விரைந்து செய்து முடிக்கும் பொருட்டு வட்டார கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ) ஆகியோருக்கு கீழ்க்காணும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.

1. பள்ளிகள் வாரியாக ஆசிரியர்களின் விவரங்களைப் பதிவேற்றம் (Uploading of Teachers Profile), செய்யும் பணிகள் மற்றும் மாணவர்களின் வருகையைப் பதிவு (Students attendance), செய்யும் பணிகளையும் வட்டார கல்வி அலுவலர் (BEO Office), வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ) மற்றும் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் குழுவாக செயல்பட்டு விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. மேற்படி பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளையும் மாணவர்களின் வருகையைப் பதிவு செய்யும் பணிகளையும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகள் எவ்வித விடுதலும் இல்லாமல் விரைந்து முடித்திட வேண்டியது சம்பந்தப்பட்ட வட்டார வள ஆசிரியப் பயிற்றுநர்களின் பொறுப்பாகும்.
3. வட்டார அளவில் மேற்படி பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்தல் மற்றும் மாணவர்களின் வருகையைப் பதிவு செய்யும் பணிகளையும் துரிதப்படுத்தும் பொருட்டு சம்பந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர் மற்றும் வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ) மற்றும் ஆசிரியப் பயிற்றுநர் இணைந்து செயல்பட்டு மேற்படி பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தப்படுகிறது.
4. மேற்படி வட்டார அளவில் நடைபெறும் பணிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர்கள் (DEOs) கண்காணித்துப் பணிகளை விரைந்து முடித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

எனவே, அனைத்து வகைப் பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் விவரங்களைக் கல்வி மேலாண்மைத் தகவல் இணைய தளத்தில் பள்ளிகள் வாரியாக பதிவேற்றம் செய்யும் பணிகளையும் மாணவர்களின் வருகையைப் பதிவு செய்யும் பணிகளையும் எவ்வித விடுதலும் இல்லாமல் விரைந்து முடித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறது.

வட்டார வளமைய அளவில் EMIS Coordinator, பிற ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அனைத்து வகைப் பள்ளிகளில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் விவரங்களை கல்வி மேலாண்மைத் தகவல் இணைய தளத்தில் பள்ளிகள் வாரியாக பதிவேற்றம் செய்துள்ளதை உறுதி செய்தல் வேண்டும். பதிவேற்றத்தில் ஏதேனும் இடர்பாடுகள் இருப்பின் உடனடியாக மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து உரிய ஆலோசனைகளைப் பெற்று பதிவினை முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. ஆகவே வட்டார கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார வளமைய பொறுப்பு மேற்பார்வையாளர்கள் இப்பணி தொய்வின்றி நடைபெறும் பொருட்டு கண்காணிப்பில் ஈடுபடவும் அறிவுறுத்தப்படுகிறது.

**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

**பெறுநர்**

1. மாவட்ட கல்வி அலுவலர்,
   வேலூர்/திருப்பத்தூர்/வாணியம்பாடி/இராணிப்பேட்டை/அரக்கோணம்.
2. வட்டார கல்வி அலுவலர், அனைத்து ஒன்றியங்கள் (மேற்பார்வையாளர் (பொ) வழியாக).
3. வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ), அனைத்து ஒன்றியங்கள்.